18.03.2025

O.S.No.280/2016

வா.சா.1.திருமதி.ஜானகி க.பெ.கிருஷ்ணன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

தாவா சொத்தில் 6 ம் பிரதிவாதி ராக்கமாளுக்கு எந்த காலத்திலும் உரிமை இருந்ததில்லை என்றால் சரிதான். ராக்கமாளுக்கு இருந்த உரிமையையும், அவரது சகோதரர் நல்லமணிக்கு இருந்த உரிமையையும் 1 ம் பிரதிவாதிக்கு அவர்கள் இருவரும் விட்டு கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் அவ்வாறு விட்டுகொடுத்ததால் தான் தாவா சொத்தில் நல்லமணிக்கும், ராக்கமாளுக்கும் உரிமையில்லை என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் தான் 1987 ம் ஆண்டு தாவா சொத்திற்கு 1 பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வந்தது என்றால் சரியல்ல. ராக்கம்மாள், நல்லமணி, பழனியாண்டி ஆகியோர்கள் தாவா சொத்தில் கூட்டுபாத்தியம் உடையவர்கள் என்று நான் கூறுகிறேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பும் எனக்கு கிரையம் கொடுத்த பழனிகுமார் கிரையம் வாங்குவதற்கு முன்பும் தாவா சொத்தை பொறுத்து 1 பிரதிவாதி பெயரில் பட்டா இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து ராக்கமாளும், நல்லமணியும் அவர்களது உரிமையை 1 ம் பிரதிவாதிக்கு விட்டு கொடுத்தன் அடிப்படையில் 1 பிரதிவாதி பூரண உரிமையாளராக இருந்து 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு வா.சா.ஆ 6 ஆவணப்படி செட்டில்மெண்ட் எழுதி சுவாதீனத்தை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டார் என்றால் சரியல்ல.

2. 1 ம் பிரதிவாதி 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை பொறுத்து செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளதால் அவர்களது வாரிசுகளான 7, 8 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை வா.சா.ஆ 6 செட்டில்மெண்ட் ஆவணப்படி அடைந்து கிஸ்தி வரி செலுத்தி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணப்படி 2 முதல் 5 பிரதிவாதிகள் அவர்களுக்குள் வா.சா.ஆ 7 முதல் வா.சா.ஆ 11 ஆவணங்களின் படி விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துவிட்டு அவர் அவர் பாகத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அந்த விடுதலை பத்திரம் நடைமுறைக்கு வந்துவிட்டதால் அதை ஆட்சேபிப்பதற்கு எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. பழனிகுமார் எனக்கு கிரையம் கொடுத்த ஆவணத்தின் அசலையும், பழனிகுமார் கிரையம் கொடுத்த ஆவணத்தின் அசலையும் என் வசம்

வைத்துள்ளதாக நான் சொல்லியிருப்பதால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான்.

3. 2 முதல் 5 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட பட்டாவை ரத்து செய்யகோரி நான் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அந்த மனுவை RDO தள்ளுபடி செய்தபோது எனது கிரைய அசல் ஆவணத்தையும், பழனிகுமார் கிரையம் பெற்ற அசல் ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்று ஒரு காரணமாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2முதல் 5 பிரதிவாதிகளுக்கு சட்டப்படி பட்டா மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதால் அந்த பட்டாவை ரத்து செய்யமுடியாது என எனது கோரிக்கை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் இந்த நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. RDO நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை எதிர்த்து DRO நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தும் அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் இந்த வழக்கு நிலுவையில் இருப்பதால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. RDO மற்றும் DRO உத்தரவை எனது நிருபண வாக்குமூலத்தில் சொன்னால் எனது வழக்கிற்கு பாதகமாக அமைந்துவிடும் என்பதால் அதைபற்றி நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

4. ராக்கம்மாள் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.165/2005 வழக்கில் என்னையும் தரப்பினராக சேர்க்கவேண்டும் என 09.01.2016 ம் தேதி நான் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் I.A.No.740/2014, 08.10.2014 தேதியிட்ட உத்தரவுப்படி இந்த வழக்கின் தாவா சொத்தை அந்த வழக்கில் இருந்து நீக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது கிரையம் கொடுத்த பழனிகுமார் தன்னை தரப்பினராக சேர்க்கவேண்டும் என மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது கிரைய ஆவணப்படி என்னால் தாவா சொத்திற்குள் நுழையமுடியவில்லை என்பதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்வதற்கு உண்டான சூழ்நிலை எனக்கு எதற்கு ஏற்பட்டது என்றால் என்னை பட்டா மாற்றம் செய்யவிடாமல் பிரதிவாதிகள் தடுத்ததால் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் பிரதிவாதிகள் நான் கூறுகூதுபோல் எந்த காலத்திலும் சட்டவிரோதமாக நுழைந்ததில்லை என்றாலும், அவர்கள் உரிமையாளர்கள் என்ற அடிப்படையில் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. இந்த பிரதிவாதிகள் மீது நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

5. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று சொல்வதும், நான் அனுபவத்தில் இருந்து வருவதாக சொல்வதும் எனது அனுபவத்தை பிரதிவாதிகள் தொந்தரவு செய்தார்கள் என்று

சொல்வதும் இந்த வழக்கிற்காக நான் சொல்லும் பொய்யாக சங்கதி என்றால் சரியல்ல. தாவா சொத்தை நல்லமணி, பழனிகுமார் கிரையம் கொடுக்க எவ்வித உரிமையும் இல்லை என்றாலும் பழனிகுமாரிடமிருந்து நான் கிரையம் பெற்றுள்ளதால் தாவா சொத்தில் எனக்கும் எவ்வித உரிமையும் சித்திக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் பெறுவதற்கு முன்பே 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை 1 ம் பிரதிவாதி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துவிட்டதால் அதை தெரிந்து கொண்டும் நான் கிரையம் பெற்றுள்ளதால் வா.சா.ஆ 6 முதல் வா.சா.ஆ 11 ஆவணங்கள் இல்லாநிலையானது என்று கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் நல்ல எண்ணத்தின் அடிப்படையில் கிரையம் பெற்றவர் அல்ல என்றால் சரியல்ல. நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.